
ஸ்ரீ சத்குரு திருவடி துணை!


# நாம் இறைவனின் கைக் கருவியே!




-தூளி பாபா-

ஸ்ரீ சத்குரு திருவடி துணை!

# நாம் இறைவனின் கைக்கருவியே!




-தூளி பாபா-

வெளியீடு :

அன்பின் குடில் நிர்வாகம்,

253/1, மேட்டூர் - பவானி மெயின் ரோடு,

கோம்பூர், நெரிஞ்சிப்பேட்டை,

அந்தியூர் தாலுக்கா, ஈரோடு மாவட்டம்,

தமிழ்நாடு - 638 311

அலைபேசி: 94439 63060,

94425 46557

மின்னஞ்சல் : anbinkudil@yahoo.co.in

முதல் பதிப்பு: 29.04.2024 ஸ்ரீஸத்குருதேவர் அவதார தின விழா!

பிரதிகள் : 1000

அட்டைப்படம் : கை பதுமை! கைக் கருவி! கை ஆயுதம்!

1. நாம் ஓர் கருவியாகவே

படைக்கப்பட்டோம்

சிந்திப்பதனால், அந்நிலையிலிருந்து

தவறிவிட்டோம்.

மீண்டும் நாம் கருவியாதலே,

“முக்தி” அல்லது “மோட்சம்”

அதற்கான ஆதாரங்கள் சில:-

**தூளி பாபாவின் குழந்தை**

**அன்பின் குடில்**

உ.

ஓம் ஸத்! ஹே பரம்பொருளே!

இந்த தூலத்தை (சரீரம்) எழுந்தருளப் பண்ணிவிட்டாய். இதை வைத்து என்னென்ன காரியங்கள் நடத்த வேண்டுமோ நடத்தி முடியும், அவற்றின் நன்மையோ, தீமையோ, புண்ணியமோ, பாபமோ, அனைத்து பலன்களும் உனக்கே, இந்த சரீரம்

இது உன் கை பதுமை!

உன் கைக் கருவி!

உன் கை ஆயுதம்!

நீ சாரதி, இந்த சரீரம் உன் ரதம்!

இது சத்தியம்! சத்தியம்!! சத்தியம்!!!

எல்லாம் நீ!

-தூளி பாபா-

3.

நினைவின்றி நிற்பதுவே அகண்டமாகும்

நினைவின்றி நிற்பதுவே நிஷ்டையாகும்

நினைவின்றி நிற்பதுவே ஞானமாகும்

நினைவின்றி நிற்பதுவே மோட்சமாகும்

நினைவின்றி நிற்பதுவே சகஜ (ஞான)மாகும்

நினைவின்றி நிற்பதுவே பிரம்மமாகும்

நினைவின்றி நிற்பதுவே சிவமுமாகும்

நினைவணுவும் இல்லை எல்லாம் பிரம்மம் தானே!

( நினைவின்றி, அதாவது எந்த எண்ணமும்

இன்றி இருப்பது தானே கருவி )

ரிபுகீதை அத்தியாயம் 5/26

-தூளி பாபா -

4. நினைப்பனைத்தும் ஒய்ந்த நிலையில்

மனிதன் கடவுளாகின்றான் !

நினைப்புகளில் உழலும் நிலையில்

கடவுள் மனிதனாகின்றான் !!

-குலசைப் பிச்சைக்காரன்-

5. சிந்தையும் நின்போல்

செயலற்று அடங்கிவிட்டால்!

வந்ததெல்லாம் நின்செயலாய்

வாழ்வேன் பராபரமே.

- ஸ்ரீ தாயுமானவர் -

6.

நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்.

பரிசுத்த வேதாகமம்

மத்தேயு ௨5 : ௨௪

7.

கருமம் நிகழ்வது கடவுளைச் சார்ந்தது. அது உன்னுடன் சம்பந்தப்பட்டதில்லை.

நீ ஒரு கருவி மட்டுமே!

வாழ்க்கையெனும் பெருநெருப்பின் ஊடாக ஒருவன் சாட்சி மனோபாவத்துடன் முன்னேறினால், அவனைச் சுற்றியுள்ள தவறானவை எல்லாம் தாமாகவே கரைந்து மறைந்து விடும்!

**-அஷ்டவக்ரர் கீதை-**

**( ஓஷோ )**

## 8. பக்தர் நரேந்திரநாத் மித்ராவின் கேள்வி : சுவாமி! நமது விருப்பப்படி நாம் செயல் ஆற்ற முடியுமா?

பகவான் ஸ்ரீ ராமக்ருஷ்ணர் பதில்:

“நான்” என்பதை, சற்றுத்தேடிப்பார்? இந்த “நான்” ஐத் தேடிப்போனால் கடைசியில் இறைவனே வெளி வருகின்றார். "**நான் கருவி” (TOOL).** அவர் அதை இயக்குபவர். "**இறைவன் தான் கர்த்தா,** நீ செய்பவன் அல்ல!” என்பதை அறிந்து கொண்டு, செயலுக்குப் பொறுப்பானவன் போல் வேலைகளில் ஈடுபடு!

உபாதி இருக்கும் வரை அஞ்ஞானம் இருக்கும்! நான் பண்டிதன்! நான் ஞானி! நான் பணக்காரன்! நான் பிரபலமானவன்! நான் கர்த்தா! நான் பாபா! நான் ஸத்குரு! இதெல்லாம் அஞ்ஞானத்திலிருந்து எழுகின்றன!

நான் கருவி! நீ இயக்குபவன்!
இதுவே ஞானம்!

-பகவான் ஸ்ரீ ராமக்ருஷ்ணர்-

9. **இராகவா!**

புறதோற்றத்தில் மட்டும் செயலார்வம் உடையவனாகவும்!

அகத்தில் ஒரு சிறிதும் அவா அற்றவனாகவும்!

புறத்தில் செயலாற்றுவோனாகவும்!

அகத்தில் செயலற்றவனாகவும் உலகில் விளையாடு!

- வசிஷ்ட மகரிஷி -

யோகவாஸிஸ்டம்

10. **Sui Yen Hsin : ஞானத்தின் செயல்முறை :**

'அனைத்துச் சூழல்களும், கர்ம விதியின்படி நடக்கின்றது' என்பதை உணர்ந்து, நம்மைச் சுற்றி நல்ல விஷயங்கள் நடக்கும் போதும், கெட்ட விஷயங்கள் நடக்கும் போதும், மனதின் சமநிலையை இழந்து விடாமல் இருத்தல் வேண்டும்!

பயிற்சியின் மூலம் பெறப்பட்ட, இயல்பு நிலையான, மன சமநிலையை புத்த நிலை (ஞான நிலை) என்பதை அறிவால் நன்குணர்ந்து, அதில் ஸ்திரமாய் இருத்தல் வேண்டும்.

**லங்கவதாரா சூத்ரா :**

**- போதி தர்மர் -**

11. அன்றே என்தன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமுங்
குன்றே அனையாய் என்னை
ஆட்கொண்டபோதே கொண்டிலையோ..
இன்றோர் இடையூறெனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே!

- மாணிக்கவாசகர் -

( திருவாசகம் )

பொருள்:-

1.அன்றே என்தன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமுங்
குன்றே அனையாய் என்னை
ஆட்கொண்டபோதே கொண்டிலையோ..

இங்கு "ஆட்கொண்டபோதே" என்ற வார்த்தையால் மணிவாசகர் கூற வருவது யாதெனில், **நான் கருவியாகும்போதே என்று கொள்ளவேண்டும்.** ஏன் என்றால் கருவி என்பது கர்த்தாவின் நீட்சியாகும். கருவியாகும் போது நீங்கள் உங்கள் தனித்துவத்தை இழந்து, கர்த்தாவின் தனித்துவமே உங்கள் மூலமாக செயல்படுவதால்

நீங்கள் கர்த்தாவின் ஓர் அங்கமாக மாறிவிடுகின்றீர்கள். **கர்த்தா என்று தனியாக ஒரு பொருள் இல்லை. அங்கங்களின் சேர்க்கையே கர்த்தாவாகும்.** ஆகவே அதை அங்கம் என்று கூறாமல் கர்த்தா என்றே கூறலாம். இதைதான் மணிவாசகர் ஆட்கொண்டபோதே" என்ற வார்த்தையால் குறிப்பிடுகிறார்.

இந்நிலையில் நீங்கள் அற்றுபோய் பகவான் ஆகிவிடுகின்றீர்கள். உங்கள் உடைமைகள் யாவும் பகவானுடைய உடைமைகள் ஆகிவிடுகிறது. மேலும் "ஆவியும்" என்கின்ற வார்த்தையினால் உடலை இயக்குபவனும் நீ தான் என்று ஆகிவிடுகிறது.

## உ. இன்றோர் இடையூறெனக்குண்டோ... எண்தோள் முக்கண் எம்மானே

எப்பொழுது நான் என்னும் அகங்காரமும், என்னுடையது என்னும் மமகாரமும் அற்றுப்போய்விடுகிறதோ, இனி இடையூறு வந்தால் என்ன? மகிழ்ச்சி வந்தால் என்ன? அதுவும் உன்னுடையதே அன்றி எனக்கில்லை என்று ஆகிவிடுகிறது.

## 3. நன்றே செய்வாய் பிழைசெய்வாய்

## நானோ இதற்கு நாயகமே!

எப்பொழுது நாம் கருவியாக மாறிவிட்டோமோ, இனி அந்த கருவி நல்ல செயல் செய்தால் என்ன? கெட்ட செயல் செய்தால் என்ன? அதற்கு பொறுப்பு கர்த்தாவே அன்றி கருவியல்ல. முடிவாக நாம் கருவியாக மாறவேண்டும் என்பதையே மணிவாசகபெருமான் கூற வருகின்றார்.

12. அவரவர்க்கு உள்ளபடி

ஈசன் அருளாலே

அவரவரைக் கொண்டு

இயற்றுமானால் - அவரவர்

நல்லார் பொல்லார் என்று

இகழ்வது ஏன்? - மனமே

எல்லாம் ஈசன் செயல்

என்று எண்!!

"சிவபோக சாரம்"

13. நின்னை எப் போது நினையவொட்
டாய்நீ நினையப் புகில்
பின்னையப் போதே மறப்பித்துப்
பேர்த்தொன்று நாடுவித்தி
உன்னைஎப் போது மறந்திட்டு
உனக்குஇனி தாஇருக்கும்
என்னைஒப் பார்உள ரோசொல்லு
வாழி இறைவனே!

-திருநாவுக்கரசர் -

( திருமுறை 4-112 )

## விரிவான பொருள் :

நாம் ஏதாவது ஒரு பொருளை நினைக்க வேண்டுமானால், அப்பொருளை நாம் பார்த்தோ, கேட்டோ அனுபவித்து இருக்க வேண்டும். இதுவரை அனுபவிக்காத பொருளை நாம் நினைத்துப் பார்க்க முடியாது. கடவுள் என்பவர் நாம் இதுவரை அனுபவிக்காத வஸ்துவாகும். ஆகவே அவரை நினைத்துப் பார்க்க முடியாது.

ஒரு பொருளை நினைத்தல் என்பது அப்பொருளின் உருவத்தை மனதில் கொண்டு வருதலாகும். கடவுள் என்பவர் எந்த குறித்த உருவமும் இல்லாமல் எங்கும் நிறைந்த ஆற்றலாக உள்ளார். ஆகவே அவருக்கு தனியாக ஒரு உருவம் கிடையாது. எப்போது நாம் எந்த வகையான உருவத்தையும் மனதில் கொண்டு வரவில்லையோ அதாவது மனம் காலியான நிலையே கடவுளின் உருவத்தை சிந்தித்தலாகும். இந்த நிலையானது ஓர் கருவிக்குரிய நிலையாகும். இதைத்தான் அப்பர் பெருமான்,

**''நின்னை எப்போது**
**நினையவொட்டாய் நீ''...**

என்று கேட்கிறார். மனதில் ஏதாவது எண்ணங்கள் தோன்றுமாயின் அதாவது ஏதாவது உருவங்கள் தோன்றுமாயின் அப்போதே இறைவனை மறந்து வேறு எங்கோ சென்று விடுகின்றோம். இது கடவுளின் வடிவங்களுக்கும் பொருந்தும். இதனையே அப்பர் பெருமான்

நினையப் புகில்
பின்னையப் போதே மறப்பித்து
பேர்த்தொன்று நாடுவித்தி
என்று கூறுகிறார்.

எப்போதுமே மனமானது காலியான நிலையே இறைவனை நினைக்கும் நிலையாகும். உலக வழக்கப்படி நாம் கடவுளின் உருவத்தை நினைக்காமல் மனம் காலியான நிலையில் இருந்தால், நாம் இறைவனை மறந்துவிட்டோம் என்பதே பொருளாகும்.

இனி மனம் காலியான நிலையில் இறைவன் வந்து குடிபுகுவதால் அந்த நிலையை இறைவனுக்கு பிடித்தமான நிலையாக கூறப்படுகிறது.

இதனையே,

''உன்னைஎப் போது மறந்திட்டு

உனக்குஇனி தாஇருக்கும் என்னை''..

என்று கூறுகிறார்.

இறைநிலையில் இறைவனுக்கு அன்னியமாக எப்பொருளும் இல்லாத தன்மையினால் இறைவனுக்கு ஒப்பார் யாரும் இல்லை. அப்பர் பெருமான் மனமானது காலியான நிலையில், ஜீவநிலை அகன்று இறைநிலை எய்துகின்றார். இதனையே

''ஒப் பார்உள ரோசொல்லு''

என்று கூறுகிறார்.

முடிவாக நாம் கருவியாகிவிட்டால் நாம் இறைவன் ஆவோம். நமக்கு ஒப்பாக யாரும் இல்லை. இதுவே மனித வாழ்வில் நாம் அடையக் கூடிய மிக மிக மிக உயர்ந்த நிலையாகும். இதனை தனக்கு அளித்த இறைவனை,

"வாழி இறைவனே"

என்று மனம் நெகிழ்ந்து இறைவனை வாழ்த்துகின்றார்.

14. இந்த உடல் ஒரு கருவி மட்டுமே, அதிலும் உணர்வற்ற ஒரு கருவி. தனக்கெனச் சொந்தமாக ஒரு வாழ்க்கை ஒரு கருவிக்கு உண்மையிலேயே கிடையாது. ஏனென்றால் தன்னைப் பயன்படுத்தும் ஒருவனை அது முழுவதுமாகச் சார்ந்துள்ளது.

**உதாரணமாக:-** ஒரு பேனாவுக்கு உணர்வு இருப்பதாக வைத்துக்கொள்வோம். "நான் நூற்றுக்கணக்கான கடிதங்களை எழுதியுள்ளேன்" என்று அதனால் சொல்ல முடியும்.

ஆனால் உண்மையில் அது ஒன்றுமே செய்யவில்லை. ஏனென்றால் அதைப்பிடிக்கும் ஒருவன் தான் அந்த கடிதங்களை எழுதியுள்ளான்.

நாமும் உணர்வுள்ளவர்களாக இருப்பதால், இந்தக் காரியங்களை எல்லாம், நாம் தான் செய்வதாக எண்ணுகிறோம். நமது கைகளில் பேனா இருப்பதைப் போலவே, ஓர் உயர்ந்த சக்தியின் கைகளில் நாம் ஒரு கருவியாக உள்ளோம். எல்லாக் காரியங்களையும் செய்து முடிப்பவன் இறைவனே.

-சுவாமி ராமகிருஷ்ணானந்தர்-

## 15. I AM THE TOOL

## நான் ஓர் கருவி

I am the willing tool

In the hands of my Lord!

நான் கடவுளின் கைகளில் முழு

விருப்பத்துடன் கருவியாக உள்ளேன்.

In Whatever field I serve

நான் எந்த துறையில் பணியாற்றினாலும்

Whatever work I do

நான் எந்த செயலை புரிந்தாலும்

He sets me to it

அவரே என்னை அதில் செயல்பட வைக்கிறார்

My life is His

என்னுடைய வாழ்க்கை அவருடையதே

My body is His

என்னுடைய உடலும் அவருடையதே

Dwelling within me

எனக்குள் இருந்து கொண்டு

He guides and controls me

என்னை வழி நடத்தவும், கட்டுப்படுத்தவும்

செய்கிறார்.

He is my friend, comrade and protector.

அவரே எனது நண்பன், தோழன் மற்றும்

காப்பாளன் ஆகிறார்.

Beloved Papa

-Swami Ramdas-

16. நாம் ஓர் கருவி என்பதற்கு பகவத்கீதை கூறும் ஆதாரங்கள்:-

**ந கர்த்தருத்வம் ந கர்மாணி**

**லோகஸ்ய ஸ்ருஜதி** ப்ரபு:|

**ந கர்மபலஸம்யோகம் ஸ்வபாவஸ்து**

**ப்ரவர்ததே** ||

**( அத்:5:14 )**

**பொருள்:**

வினைத்தலைமை, வினை, வினைப்பயனைப் பெறுதல் ஆகியவைகளை இறைவன் உலகுக்கு உண்டு பண்ணவில்லை. இயற்கையே இங்ஙனம் செய்கிறது.

**விரிவான பொருள் :**

எப்பொழுது,

1. செயலை செய்விப்பதற்கும்
   **உனக்கு உரிமை இல்லை!**
2. உன் இஷ்டப்படி செயல்
   செய்வதற்கும் **உனக்கு உரிமை இல்லை!**
3. செயலின் பயனை
   அனுபவிப்பதற்கும் **உனக்கு உரிமை இல்லை!**

இவை மூன்றும் உனக்கு இல்லையென்றால், நீ ஒரு கருவி என்பதே முடிவாகும்.. கருவிக்கு மட்டும்தான் இவை மூன்றும் இல்லை. ஆகவே ஒவ்வொரு சரீரமும் ஓர் கருவி என்பதே பகவானின் முடிவாகும்.

17. ஸ்ரீமத் பகவத் கீதையில் முதல் 17 அத்தியாயங்களிலும் பலவிதமான யோக தத்துவங்களை பகவான் க்ருஷ்ணன் அர்ஜீனனுக்கு கூறினாலும், கடைசியில் அர்ஜீனன் தனக்கு குழம்பிவிட்டது. தான் என்ன செய்யவேண்டும் என சுருக்கமாக கூறுங்கள் என்று விண்ணப்பிக்கின்றான். அதற்கு பகவானின் கூற்று.

**ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம்**

**சரணம் வ்ரஜ |**

**அஹம் த்வா ஸர்வபாபேப்யோ**

**மோக்ஷயிஷ்யாமி மா சுச : ||**

பொருள் :

தர்மங்களையெல்லாம் அறவே விட்டு விட்டு என்னையே சரணடைக! பாபங்களைனைத்தினின்றும் உன்னை நான் விடுவிப்பேன்: நான் உனக்கு மோக்ஷத்தை வழங்குவேன். வருந்தாதே!

விரிவான பொருள் :

இங்கு தர்மங்கள் எனப்படுவது வாழ்க்கையில் கடைபிடிக்கவேண்டிய சட்டதிட்டங்கள். நமக்கு இருவகை சட்டதிட்டங்கள் உண்டு.

I.உடலுக்கான சட்டதிட்டங்கள்:-

உடல் நம் கட்டுப்பாட்டில் இல்லாததினால் அதற்கு நாம் சட்டதிட்டங்கள் போடமுடியாது. எது நடக்கின்றதோ அதை அப்படியே ஏற்றுக்கொள்வதை தவிர வேறு வழியில்லை.

**உ.மனதிற்கான சட்டதிட்டங்கள்:-**

மனம் நம் வசம் உள்ளது. அதற்குத்தான் நாம் சட்டதிட்டங்கள் போடவோ, போட்ட சட்டதிட்டங்களை நீக்கவோ உரிமை உண்டு.

இங்கு பகவான் எல்லா தர்மங்களையும் தியாகம் செய்துவிட்டு என்னை சரணடை என்று கூறுவது மனதின் சட்ட திட்டங்களுக்குதான், பொருத்தும் மனதின் சட்ட திட்டங்களான நல்லது - கெட்டது, சரி - தவறு, பாவம் - புண்ணியம், உயர்வு - தாழ்வு..... என்பவையாகும்.

பகவான் இவைகளை என்னிடம் அர்ப்பணித்துவிடு என்று கூறும்போது அதற்கு அர்த்தம், எதையும் மாற்ற முயற்சிக்காமல் அப்படியே ஏற்றுக்கொண்டுவிடு என்றாகும். அப்போழுது மனதின் இயக்கம் அற்றுப்போய்விடுகிறது. ஆகவே மனமற்றநிலை, அங்கு உருவாகிறது மனம் அற்றநிலையில் உடல் இயங்குவது, கருவிக்கே உரிய தன்மையாகும்.

ஆகவே, பகவான் நீ ஒரு கருவியாக மாறிவிடு என்று கூற வருகின்றார். கருவியாக மாறுவதே மோஷம் ஆதலால், நீ மோக்ஷத்தைப் பற்றி கவலைப்படாதே என்று கூறுகிறார். கருவிக்கோ பாவ - புண்ணியம் கிடையாது.

பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அர்ச்சுனனுக்கு கூறியது.

பகவத் கீதை (18:66)

18. ஈச்வர : ஸர்வபூதானாம்

ஹ்ருத்தேசேऽர்ஜுன திஷ்டதி |

ப்ராமயன் ஸர்வபூதானி யந்த்ராரூடானி

மாயயா || ( அத்:18:61 )

பொருள் :

அர்ஜுனா, ஈசுவரன் உயிர்களையெல்லாம் உடல் என்னும் யந்திரத்திலேற்றி மாயையினால் ஆட்டிக் கொண்டு அவைகளின் உள்ளத்திலிருக்கிறான்.

விரிவான பொருள்:

இறைவன் உயிர்களையெல்லாம் உடல் என்னும் கருவியில் ஏற்றி மாயையினால் ஆட்டிக்கொண்டு அவைகளின் உள்ளத்திலிருக்கின்றான் என்றால் உடல் என்பது கருவியாகவே படைக்கப்பட்டுள்ளது என்பது உறுதியாகிறது.

19. யார் ஞானி, யார் யோகி, யார் வாழ்க்கையில் செய்ய வேண்டியதை செய்து முடித்தவன் என்ற கேள்விக்கு பதில் சொல்ல வருகிறார்.

**கர்மண்யகர்ம ய : பச்யேதகர்மணி ச**
**கர்ம ய : ।**
**ஸ புத்திமான் மனுஷ்யேஷு ஸ யுக்த :**
**க்ருத்ஸ்னகர்மக்ருத் ||**

**(அத்:4:18)**

**பொருள் :**

கர்மத்தில் அகர்மத்தையும், அகர்மத்தில் கர்மத்தையும் காண்போன் மக்களுள் மேதாவி; அவனே யோகி; அவனே எல்லாம் செய்து முடித்தவன்.

விரிவான பொருள் :

நம்மிடம் இரண்டுவிதமான இயக்கங்கள் உண்டு.

**1.புறயியக்கம் (உடலியக்கம்)**
**2.அகயியக்கம் ( மனயியக்கம்)**

இதில் உடலியக்கம் நம் வசம் கிடையாது. மனயியக்கம் முழுமையாக நம்மால் தோற்றுவிக்கப்பட்டது; நம் கட்டுப்பாட்டில் உள்ளது. இனி ஒரு ஜீவன் கருவியாக மாறிவிட்டால்,

அவனுக்கு உடலியக்கம் உண்டு மனயியக்கம் இல்லை ஆகவே உடல் செயல்பட்டாலும் அவன் செயல்படவில்லை. இதுவே கர்மத்தில் அகர்மம் என்று கூறப்படுகிறது.

அடுத்த, அவன் கருவியாக மாறவில்லை என்றால் இரு இயக்கங்களும் உண்டு. ஆகவே உடலியக்கம் அற்றபோதும், மனம் இயங்கிக் கொண்டேயிருக்கும். ஆகவே உடலளவில் அவன் சும்மா இருந்தாலும் மனயியக்கம் இருப்பதால் அவன் செயல்பட்டுக்கொண்டே இருக்கின்றான். இதுவே அகர்மத்தில் கர்மம் என்று குறிப்பிடப்படுகிறது.

இதன் மூலம் பகவான் கூற வருவது என்னவென்றால் உடலியங்கும்போதும் இல்லை சும்மாயிருக்கும்போதும் நீ உடல் அல்ல என்பதை புரியவைக்கின்றார். ஆகவே இறுதியாக நான் உடலில்லை என்பதே இவருடைய கூற்றாகும். உடல் நான் என்கின்ற பற்று நீங்கிவிட்டால் அவனே ஞானி, யோகி, வாழ்வில் செய்ய வேண்டியதை செய்து முடித்தவன்.

இந்த உண்மையை கருத்தியலாக புரிந்தால் மட்டும் போதாது, வாழ்வில் நடைமுறைப்படுத்தவேண்டும் அவனைத்தான் பகவான் "காண்போன்" என்ற வார்த்தையில் குறிப்பிடுகிறார்.

## ௨0. நாம் ஆதியில் கருவியே!

1. ஆதியில் இறைவன் உன்தனையே
கருவியாய் படைத்தான் தனக்காக - அந்த
உண்மையை மறந்து நீயுமே
சிந்திக்கின்றாயே வீணாக.

(ஆதியில்....)

௨. இருவகை இயக்கம் உனக்குண்டு
புறயியக்கம் அது உடலியக்கம்
அகயியக்கம் உன் மனயியக்கம் - இதை
புரிந்து கொள்வாயே அறிவாலே.

(ஆதியில்....)

௩. கருவிக்கோ புறயியக்கம் உண்டு
அகயியக்கம் அங்கு கிடையாது
புறயியக்கம் அது இறையியக்கம்
அகயியக்கம் உன் உருவாக்கம்.

(ஆதியில்...)

4. புறயியக்கத்தால் பயன் உண்டு

அகயியக்கம் வீண் கற்பனையே - இதை

தெளிவாய் புரிந்து முயற்சித்தால்

அகயியக்கத்தை நிறுத்திடலாம்!

**( ஆதியில்....)**

5. சிந்திப்பதை நீ விட்டுவிட்டால்

மீண்டும் கருவியாய் மாறிவிடுவாய்

கருவியாய் வாழ்வதே முக்தியென்று - நீ

அறிவாலே அறிந்திடுவாய்!

**( ஆதியில்...)**

6. மனித வாழ்வின் இலட்ச்சியமே

சிறந்த கருவியாய் மாறுவதே - இதை

தவிர வேறு எதையுமே - செய்ய

முடியாதே நீ புரிந்திடுவாய்!

**( ஆதியில்...)**

**இருப்பது ஒன்றே!**

**நடப்பது நலமே!!**

# எல்லாம் நீ !